# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## பெற்றோலிய வளங்கள்

**இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்காகவும்; ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் மீதான தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்காகவும் இலங்கையிலுள்ள நவீன தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமைச் செயல்முறைகளினூடாக உள்நாட்டுப் பெற்றோலிய வளங்களின் அதிகபட்ச பொருளாதாரப் பெறுமானத்தைக் கவர்கின்ற கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காகவும் முகாமை செய்வதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*வலுசக்தி அமைச்சர் அவர்களால் 2021, ஒகத்து மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, யூலை மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **66 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 84.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பெற்றோலிய வளங்கள்**

*ச.வ-ஓ. 02/2008 (II)*

***இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்காகவும்; ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் மீதான தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்காகவும் இலங்கையிலுள்ள நவீன தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமைச் செயல்முறைகளினூடாக உள்நாட்டுப் பெற்றோலிய வளங்களின் அதிகபட்ச பொருளாதாரப் பெறுமானத்தைக் கவர்கின்ற கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காகவும் முகாமை செய்வதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

***1.*** *(1) இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இச்சட்டத்தின் பாகம் V இன் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும், அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எத்தேதியன்று புறக்குறிப்பிடப் படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(3) இச்சட்டத்தின் பாகம் V இன் ஏற்பாடுகள், அத்தகைய நோக்கத்துக்காக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

**2**. சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:- சட்டத்தின் குறிக்கோள்கள்

(அ) இலங்கையிலுள்ள எல்லாப் பெற்றோலிய வளங்களினதும் தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமையை மேவுகின்ற ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழிலுக்கான தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதன்மீது மதியுரையளிப்பதற்கு கொள்கை மதியுரைக் குழுவொன்றைத் தாபித்தல்;

(ஆ) தொழிற்பாடுசார் வழிகாட்டுநெறிகளை வழங்குதலுட்பட இலங்கையிலுள்ள எல்லாப் பெற்றோலிய வளங்களினதும் தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமையின் நடைமுறைகள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதற்குச் சட்டப்படியான கட்டுக்கோப்பை வழங்குதல்;

(இ) இலங்கையிலுள்ள பெற்றோலிய வளங்களின் தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமை தொடர்பாகச் சுயேச்சையான, வினைத் திறனான மற்றும் வெளிப்படையான ஒழுங்குபடுத்தும் கட்டுக்கோப்பொன்றைத் தாபித்தல்;

(ஈ) கிடைக்கக்கூடியனவான பெற்றோலிய வளங்களை ஒப்புரவான, காப்பான மற்றும் சூழல்ரீதியில் நிலைபெறுதகுமுறையில் முகாமைசெய்தல்; அத்துடன்

(உ) ஒப்பந்தகாரர்களுக்கு அரசிறைசார் நிலையுறுதியை வழங்குகின்ற அதேவேளையில் நாட்டில் உருவாகி வருகின்ற தேவைகளை எதிர்கொள்ளும் அரசிறைசார் நடப்புமுறைகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்தல்.

## பாகம் I

### இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்

**3.** (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) "இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை" எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டியதுமான அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(3) அதிகாரசபையானது, பின்வருவனவற்றுக்குப் பொறுப்புடையதாதல் வேண்டும்:-

(அ) ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கை தொடர்பில் மதியுரைக் குழுவுக்கு விதப்புரைகளைச் செய்தலும்;

(ஆ) சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதலும்; அத்துடன்

(இ) சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில், இலங்கையிலுள்ள ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட எல்லா ஒழுங்குபடுத்தும் பணிகளையும் புரிதலும்.

அதிகாரசபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**4**. அதிகாரசபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) தேடிக்கண்டறிகைத் துண்டங்களையும் அபிவிருத்தித் துண்டங்களையும் எல்லைவரையறுப்பதற்கும் பெயர் குறிப்பதற்கும் கூட்டாய்வுகளுக்காகப் பெயர்குறிக்கப்பட வேண்டிய இடப்பரப்புகளை வரையறுத்துக்கூறுவதற்கும் கரைகடந்த மற்றும் கரைமீதான இடப்பரப்புகளை நுண்விலைசார் பிரிவுகளாகப் பிரிக்கின்ற நிலப்படமொன்றைத் தயாரித்தலும்;

(ஆ) 16 ஆம் பிரிவின் நியதிகளின்படி எல்லை வரையறுக்கப் பட்டுப் பெயர்குறிக்கப்பட்டவாறான துண்டங்களில் முதலீட்டுக்காகக் கிடைக்கக்கூடிய ஏக்கரளவை மேம் படுத்துதலும் மற்றும் சந்தைப்படுத்துதலும்;

(இ) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவின் கலந்தாலோசனையுடன், அவசியமானவிடத்து, ஒவ்வொரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை யினுள்ளும் உள்ளடக்கப்பட்ட நியதிநிபந்தனைகள்பற்றி ஒப்பந்தகாரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துதலும்;

(ஈ) இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா உரிமங்களையும் சான்றிதழ்களையும் வழங்குதலும் மற்றும் அவற்றை இல்லாதாக்குதலும், இடைநிறுத்துதலும், வேறுபடுத்து தலும் அல்லது திருத்துதலும்;

(உ) இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட உரிமங் களுக்கான உரிமக் கட்டணத்தைத் தீர்மானித்தலும் மற்றும் விதிப்பனவுசெய்தலும்;

(ஊ) பெற்றோலியத் தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்து வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளையும் வழிகாட்டுநெறிகளையும் வழங்குதலும்;

(எ) தரவு கொள்ளுதல், உரிமமளித்தல் மற்றும் தரவை முகாமைசெய்தல் அல்லது தரவு பற்றிய உடன்படிக்கைகள் போன்றவையும் ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பானவையுமான எல்லா உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும்;

(ஏ) இச்சட்டத்தின் குறிக்கோள்களுடன் இசையவுள்ள அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது, ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் ஓர் ஒப்பந்தகாரரின் பங்குபற்றுகின்ற அக்கறையைக் குறித்தளித்தல் அல்லது கைமாற்றுதல் தொடர்பான கருமங்கள்மீது அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தலும்;

(ஐ) விலைகூறல்களைக் கோருகின்ற, மதிப்பீடுசெய்கின்ற மற்றும் அளிக்கின்ற நடைமுறையில் தேவைப்படுகின்றவாறான எல்லா உட்கட்டமைப்புச்சார் மற்றும் ஏனைய நிருவாக ஆதரவை வழங்குதலும்;

(ஒ) அதிகாரசபை இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய பணியாட்டொகுதியினரைத் தொழிலுக்கமர்த்துதலும்;

(ஓ) சர்வதேசரீதியில் போட்டியுள்ள ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் ஒன்றின் தகுதிவாய்ந்த மற்றும் பொறுப்புள்ள ஒழுங்குபடுத்துகையைப் புரிதலும்;

(ஔ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதலும் மற்றும் வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும், விற்பனை செய்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்;

(க) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதலும்:

ஆயின், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, காசாகப் பெறப்படும் எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும், கொடைகளும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ங) சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக ஏதேனும் வங்கியில் அல்லது நிதிநிறுவனத்தில், வெளிநாட்டு நாணயங்களில் உட்பட, கணக்குகளைத் திறத்தலும் மற்றும் பேணுதலும், அத்துடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி நிதியத்தை நிருவகித்தலும்;

(ச) பெற்றோலியத் தொழிற்பாடுகளின் வினைத்திறனான மற்றும் பயனுள்ள முகாமைக்காகவும், ஒரு பேரழிவு ஏற்படும் பட்சத்தில் பெற்றோலியத் தொழிற்பாடுகளின் முகாமைக்காகவும் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வழிகாட்டுநெறிகளையும் பணிப்புகளையும் வழங்குதலும்;

(ஞ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது அதற்கு உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான செயற்பாடுகளைக் கண்காணித்தலும் மற்றும் கட்டுப்படுத்துதலும்; அத்துடன்

(ட) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவாகவிருக்கக்கூடிய அல்லது இடைநேர்விளைவாகவிருக்கக்கூடிய அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தலும்.

## பாகம் II

### அதிகாரசபையை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்

பணிப்பாளர் சபையை அமைத்துருவாக்குதல்

**5.** (1) அதிகாரசபையின் அலுவல்களினது நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட, அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(i) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(iii) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(iv) பெற்றோலிய வளங்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அமைச்சின் மேலதிகச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி; அத்துடன்

(v) 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவர்களும்) ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் துறையில் திறமை எய்தியுள்ளவர்களும், அவர்களின் தகைமைகள் விதித்துரைக்கப்படவேண்டியவர்களும் அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவர்களுமான நான்கு உறுப்பினர்கள்.

(4) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் தவிசாளர்

**6.** (1) அமைச்சர், சபையின் தவிசாளராக இருப்பதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது அமைச்சரினால் எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகத் தவிசாளர் என்ற பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) சுகவீனம், வேறு உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தவிசாளர் தமது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும்,

பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்று வதற்கும் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, நியமிக்கப் பட்ட உறுப்பினரொருவராக அவரது வழமையான கடமைகளு டன்சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு அமைச்சர் வேறெவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்க லாம்.

*சபையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப் படுவதற்கான தகைமை யீனங்கள்*

**7**. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் சபையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பின ரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இராதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் ஒருவராக அல்லது வங்கிமுறிந்தவர் ஒருவராக வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்புவிடு விக்கப்படாத கடனிறுக்கவகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் ஒருவராக இருந்தால்;

(ஈ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப் பட்டால்;

(உ) அவர், ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்;

(ஊ) அவர், இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்புக்கு உட்படுகின்றவராக இருந்தால் அல்லது உட்பட்டவராக இருந்திருந்தால்;

(எ) அவர், அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழான ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(ஏ) அவர், சபையின் உறுப்பினரொருவர் என்றமுறையில் அவரது பணிகள் அவரினால் நிறைவேற்றப்படுவதனை பங்கமானமுறையில் பாதிக்கும் சாத்தியங்கொண்டவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை உடையவராக இருந்தால்.

*சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலங்கள்*

**8**. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு, பதவிவிலகுகை அல்லது அகற்றுகைமூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானதாயினுஞ்சரி அல்லது வேறுவகையானதாயினுஞ் சரி, மேலதிகக் காலமொன்றுக்கு மேற்படாமல் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் அகற்றுகை, பதவி விலகுகை முதலியன*

**9**. (1) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகையானது, அமைச்சரினால் அப்பதவி விலகுகை எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட

உறுப்பினரொருவர், சபையின் உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கோ அல்லது வேறேதேனும் பதவியில் சபைக்குச் சேவையாற்றுவதற்கோ தகவுடையவராதலாகாது.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர் 5(3) (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், அமைச்சர் 5 (3) (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய உறுப்பினர் வருகைதராதபோது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் வராமைபற்றித் தவிசாளருக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் 5 (3) (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

**10**. (1) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், தவிசாளரும் இரு பதவிவழி உறுப்பினர்களுமுட்பட ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் எல்லாக் கூட்டங் களையும் அழைத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்று, ஒன்றில்–

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றாகக் கூடுகின்றவர்களும் ஒரு கூட்டநடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர் களுமான எண்ணிக்கையினரான உறுப்பினர்களினா லும்; அல்லது

(ஆ) கூட்டத்தில் பங்குபற்றுகின்றவர்களும் ஒரு கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின் காலநீட்சியின்போது அதன்மூலம் ஒவ்வொரு பங்குபற்றுகின்ற உறுப்பினரை யும் உடனிகழ்கின்றமுறையில் காணமுடியுமானவர் களாகவும் கேட்கமுடியுமானவர்களாகவும் இருக்கின்ற கட்புல-செவிப்புலத் தொடர்பாடலின்மூலமும்,

நடாத்தப்படலாம்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரினது வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அவரது வாக்குடன்சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளரானவர் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதபோது சமுகமளித்துள்ள உறுப்பினர் களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், சபையின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் கூட்டங்கள் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அதனால் தாபிக்கப்பட்ட நடைமுறைக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

*சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது*

**11.** சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமை காரணமாக அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாக இருப்பதெனக் கருதப்படுதலோ ஆகாது.

*அதிகாரசபையின் இலச்சினை*

**12.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது-

(அ) சபை காலத்துக்குக்காலம் முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(இ) சபையின் அனுமதியுடனும் சபையின் இரு உறுப்பினர்களினது முன்னிலையிலும்தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் III

## பெற்றோலிய வளங்களினது பெற்றோலியத் தரவினதும் சொத்தாண்மையும் ஆரம்பநிலை பெற்றோலியக் கைத் தொழிலின்மீதான தேசிய கொள்கையை உருவாக்குதலும்

பெற்றோலிய வளங்களினதும் பெற்றோலிய தரவினதும் சொத்தாண்மை

**13.** (1) (அ) இலங்கையினது நிலப்பரப்பின் மேற்பரப்பகத்தினுள்; அல்லது

(ஆ) கடல் பற்றிய சட்டத்தின்மீதான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின் இறுதிச்சட்டத்துக்கான பின்னிணைப்பு II இல் அடங்கியுள்ள புரிந்துணர்வுக் கூற்றுட்பட, சொல்லப்பட்ட சமவாயத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட கடற்படுக்கை, இலங்கையின் உள்நாட்டு நீர்ப்பரப்புகளின் கீழ்க்கடல்சார் இடப்பரப்புகளின் கீழ்மண், வரலாற்று முறையான நீர்ப்பரப்புகள், ஆள்புலக் கடல், அணித்தாயுள்ள வலயம், புறநீங்கலான பொருளாதார வலயம் மற்றும் கண்ட ஓடு என்பவற்றின்மீது அல்லது அவற்றின்கீழ்,

இயற்கையாக இடம்பெறுகின்ற எல்லாப் பெற்றோலிய வளங்களினதும் தனிச் சொத்தாண்மையானது, அத்தகைய பெற்றோலிய வளங்கள் எந்த மண்ணுக்குக்கீழ் காணப்படுகின்றனவோ அந்த மண்ணுக்கு எவரேனுமாள் கொண்டுள்ள ஏதேனும் உரிமை, சொத்தாண்மை அல்லது வேறுவகையானது எவ்வாறிருப்பினும், அரசுக்கு உரித்தாதல் வேண்டும்.

(2) இலங்கையில் ஏதேனும் பெற்றோலியத் தொழிற்பாட்டைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட எல்லாப் பெற்றோலியத் தரவுகளினதும் சொத்தாண்மையானது அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெற்றோலியத் தரவின் முகாமையும் கட்டுப்பாடும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கைமுறைக்கும் கட்டணங்களுக்கும் அமைய, எவரேனுமாளினாலான வர்த்தக, கல்வி அல்லது விஞ்ஞானப் பயன்பாட்டுக்காகப் பெற்றோலியத் தரவை அணுகுவதற்கு அனுமதிவழங்கி உரிமமொன்றை வழங்கலாம்.

கொள்கை மதியுரைக் குழு

**14.** (1) அமைச்சர், அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கையை உருவாக்குதல்பற்றி மதியுரையளிப்பதற்கு, கைத்தொழில், வர்த்தகம், சட்டம் என்ற துறைகளிலும் மற்றும் வேறேதேனும் விடயத்திலும் நிபுணர்களைக் கொண்டுள்ள கொள்கை மதியுரைக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) கொள்கை மதியுரைக் குழுவின் மதியுரையின்மேல், அமைச்சர், அவசியமானவாறான மேலதிகத் தகவல்களைக் கோரலாமென்பதுடன், மற்றவற்றுக்கிடையில் தேசிய கொள்கையின்கண் தரப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளையும், நடவடிக்கைகளையும், திட்டங்களையும் அடக்கியுள்ள ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கையையும், சுதேச பெற்றோலிய வளங்களின் தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமை என்பனவற்றை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாகப் பின்பற்றப்படவேண்டிய ஒன்றுதிரண்ட நடைமுறையையும் உருவாக்குவதற்கு என அறிவுறுத்தல்களையும் அவர் வழங்குதலும் வேண்டும்.

(3) அமைச்சர் அதன்பின்னர் ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கையை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக அதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கை, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மேல், அத்தகைய தேசிய கொள்கையானது ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் மீதான தேசிய கொள்கையாதல் வேண்டும்.

(6) (அ) ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கையானது, கொள்கை மதியுரைக் குழுவினால் மீளாய்வு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும்போதெல்லாம் அது அவ்வாறு செய்யலாம்.

(ஆ) ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான அத்தகைய தேசிய கொள்கையானது, கொள்கை மதியுரைக் குழுவின் மதியுரையின்மீது, ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் பற்றி உள்நாட்டுரீதியிலாயினுஞ்சரி அல்லது உலகளாவியரீதியிலாயினுஞ் சரி தொழினுட்பவியல்சார் மற்றும் வர்த்தக அபிவிருத்திகளுட்பட, பெற்றோலிய வளங்கள் முகாமைச் செயல்முறைகளில் அல்லது நடைமுறைகளில் புதிய எவையேனும் அபிவிருத்திகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சரினால் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(இ) அத்தகைய ஒவ்வொரு திருத்தமும் அல்லது வேறுபாடும் இப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(7) கொள்கை மதியுரைக் குழுவின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(8) ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில்மீதான தேசிய கொள்கைக்கு இணங்கியொழுகுதல் ஒவ்வோர் அக்கறை கொண்டுள்ளவரினதும் கடமையாதல் வேண்டும்.

## பாகம் IV

### துண்டங்களை அல்லது இடப்பரப்புகளை எல்லைவரை யறுத்தலும் பெயர்குறித்தலும், பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையை அல்லது கூட்டாய்வு உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதலும், தேடிக்கண்டறிகை உரிமங்களை வழங்குதல் முதலியனவும்

பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை அல்லது கூட்டாய்வு உடன்படிக்கை

**15**. ஆளொருவர் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை அல்லது கூட்டாய்வு உடன்படிக்கை என்ற வடிவத்தில் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டிருந்தாலொழிய, அத்தகைய ஆள் இலங்கையில் ஏதேனும் பெற்றோலியத் தொழிற்பாட்டை நடாத்துதலாகாது.

தேடிக் கண்டறிகைத் துண்டங்களை அல்லது அபிவிருத்தித் துண்டங்களை எல்லை வரையறுத்தலும் பெயர் குறித்தலும்

**16**. (1) அமைச்சர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பெற்றோலியத்தை இயல்திறனாகக் கொண்டவையாக அடையாளங் காணப்பட்டவையும் பெற்றோலியத் தொழிற்பாடுகளை அல்லது ஆய்வு அல்லது ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை எவரேனும் ஒப்பந்தகாரர் நடாத்துவதற்கு முனையப்படவுள்ளவையுமான கரைகடந்த மற்றும் கரைமீதான இடப்பரப்புகளினுள், விடயத்துக் கேற்ப, தேடிக்கண்டறிகைத் துண்டங்களென அல்லது அபிவிருத்தித் துண்டங்களென அழைக்கப்படவேண்டிய துண்டங்களை எல்லைவரையறுப்பதற்கும் பெயர்குறிப்பதற்கும் அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) தேடிக்கண்டறிக்கைத் துண்டங்களுக்கு அல்லது அபிவிருத்தித் துண்டங்களுக்குப் பெயர்குறித்தலானது இச்சட்டத்தின் 4(அ) என்னும் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட நிலப்படங்களின் அடிப்படையின்மீது இருத்தல் வேண்டுமென்பதுடன், அவை பின்வருமாறு அடையாளங்காணப்படுதலும் வேண்டும்:-

(அ) கரைகடந்து அமைந்துள்ளனவாயின், பெற்றோலியத்தை இயல்திறனாகக்கொண்ட இடப்பரப்பைக் குறிப்பீடுசெய்து அடையாளங்காணப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) கரைமீது அமைந்துள்ளனவாயின், அவை எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளனவோ அந்த நிருவாக மாவட்டத்தைக் குறிப்பீடுசெய்து அடையாளங்காணப் படுதல் வேண்டும்.

(3) ஒரு தேடிக்கண்டறிகைத் துண்டம் எனவழைக்கப்படும் ஒவ்வொரு நுண்வலைசார் பிரிவுக்கும், "துண்ட அடையாளங்காட்டி" எனவழைக்கப்படவேண்டிய ஒரு தனித்துவமான குறிப்பீட்டு இலக்கம் கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தேடிக் கண்டறிகைத் துண்டங்கள், அவ்வாறு விரும்பப்படின், தனித்துவ மானமுறையில் பெயர்குறிக்கப்பட்ட பெரிய துண்டங்களாக ஒன்றாகத் தொகுதிப்படுத்தப்படலாம்.

(4) தேடிக்கண்டறிகைத் துண்டமொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்படுவதன்மேல், ஒழுங்குவிதியினால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான முறையொன்றில் அதனை வெளியிடுவதற்கு அதிகாரசபை அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வரையறுத்துக் கூறப்பட்ட தேடிக் கண்டறிகைத் துண்டங்கள் தொடர்பில் பெற்றோலியத் தொழிற்பாடு களை நடாத்து வதற்கான முன்மொழிவு களைக் கோருதல்

**17.** அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், அமைச்சரவை யினால் அங்கீகரிக்கப்பட்டதும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப் பட்டதுமான நடவடிக்கைமுறைக்கு இசைந்தொழுக அடையாளங் காணப்பட்ட கரைமீதான அல்லது கரைகடந்த துண்டங்களைத் தேடிக்கண்டறிவதற்காக அல்லது அபிவிருத்தி செய்வதற்காக உள்நாட்டில் அல்லது சர்வதேசரீதியில் முதலீட்டு முன்மொழிவு களைக் கோருதல் வேண்டும்.

பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை

**18.** (1) ஒப்பந்தகாரர் ஒருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகவும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட வேறேதேனும் முறையிலும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(2) ஒரு தேடிக்கண்டறிகைத் துண்டத்தின் சூழ்நிலைகள், பாதுகாப்பு, சூழல், சமூக, கலாசார மற்றும் தொல்பொருளியற்சார் கருமத்துடன் தொடர்புபட்ட ஏதேனும் அக்கறையைத் தேவைப்படுத்துமிடத்து, அத்தகைய கருமங்கள் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படலாம். பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையினது பேச்சுவார்த்தைமூலம் செய்யப்பட்ட நியதிநிபந்தனைகள், ஒவ்வொரு தேடிக்கண்டறிகைத் துண்டம் தொடர்பான பொருளாதார மற்றும் தொழினுட்பக் கரிசனைகளுடன் சேர்த்து அத்தகைய அக்கறைகளுக்கமைய வித்தியாசப்படலாம்.

(3) ஒப்பந்தகாரர் ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையைச் செய்துகொள்வதன்மேல், பெற்றோலியத் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்குமுன்னர் தேடிக்கண்டறிகை உரிமமொன்றுக்காக விண்ணப்பித்து அதனைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(4) ஒப்பந்தகாரர் தேடிக்கண்டறிகை உரிமத்தைப் பெற்றதன் மேல், இயைபான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள முறையில் பெற்றோலியத் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் புறநீங்கலான உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**19**. (1) கூட்டாய்வுகளுக்காகப் பெயர்குறிக்கப்படவேண்டிய இடப்பரப்புகளை அதிகாரசபை வரையறுத்துக்கூறி எல்லைவரையறுக்கலாமென்பதுடன், சபையானது பொருத்தமானவர்களெனக் கருதுகின்ற எவரேனும் ஆட்களிடமிருந்து அவர்களின் அனுபவம், நற்பெயர் மற்றும் நிதிசார் ஆற்றல் என்பவற்றின் அடிப்படையின்மீது அதற்கான முன்மொழிவுகளை ஏற்றுக்கவனிக்கலாம். கூட்டாய்வு உடன்படிக்கை

(2) அதிகாரசபையானது, முன்மொழியப்பட்ட கூட்டாய்வு உடன்படிக்கையை அமைச்சரினால் கவனத்துட்கொள்ளப்படுவதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் கூட்டாய்வு உடன்படிக்கையின் நியதிநிபந்தனைகளுடன் திருப்திப்படுவதன்மேல், விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கைமுறைகளுக்கு இசைந்தொழுக, ஒரு கூட்டாய்வு உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதலும் வேண்டும்; அத்துடன் அதனை அமைச்சரவையின் தகவலுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**20.** (1) ஒப்பந்தகாரர் ஒருவர் தேடிக்கண்டறிகைத் துண்டம் ஒன்றினுள் பெற்றோலியத் தொழிற்பாடுகளை நடாத்தும்போது வர்த்தகரீதியில் ஒப்பேறக்கூடிய தொகைகளில் பெற்றோலிய வளங்களைக் கண்டுபிடிக்குமிடத்து, அத்தகைய ஒப்பந்தகாரர்– அபிவிருத்தி உரிமம்

(அ) அத்தகைய கண்டுபிடிப்புப்பற்றி உடனடியாக அதிகார சபைக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கண்டுபிடிப்பைத் தரமதிப்பீடு செய்தல் தகுதியாகவுள்ள தாவென்பதனைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகத் தேவைப்பட்ட பரீட்சிப்புகளை நடாத்துதலும் வேண்டும் அல்லது நடாத்தச்செய்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் அங்கீகாரத்துக்காக, பெயர்குறிக்கப் பட்ட இடப்பரப்பின் பெற்றோலிய இயல்திறனைத் தரமதிப்பீடு செய்வதற்கு வடிவமைக்கப்பட்டவொரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) பெற்றோலிய வளங்களின் வர்த்தகரீதியில் ஒப்பேறக்கூடிய வொரு தொகை உள்ளமையைத் தரமதிப்பீடு வெளிப்படுத்தும் பட்சத்தில், அதிகாரசபையானது ஒழுங்குவிதியினால் விதித்துரைக் கப்பட்ட முறையில் அக்கண்டுபிடிப்பை வர்த்தகரீதியில் ஒப்பேறக்கூடியதாக வெளிப்படுத்துவதற்கு முற்படலாம்.

(3) ஒப்பந்தகாரர், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்தப்பட்ட வர்த்தகக் கண்டுபிடிப்பின் சூழ்நிலைகளை யும் பரப்பளவையும் கவனத்துட்கொண்டபின்னர், பின்வருவன வற்றைக் கொண்டிருக்கவேண்டிய அபிவிருத்தி மற்றும் முதலீட்டுத் திட்டமொன்றைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:–

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கருமங்களையும்; அத்துடன்

(ஆ) தேடிக்கண்டறிகைத் துண்டத்தினுள் வர்த்தகக் கண்டுபிடிப்பை அபிவிருத்தி செய்வதற்காகவும் உற்பத்தி செய்வதற்காகவும் ஒப்பந்தகாரரின் முன் மொழிவையும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி, வர்த்தகக் கண்டுபிடிப்பொன்றாக இருப்பதாக வெளிப்படுத்தப்பட்ட பெற்றோலிய வளங்களின் தொகை, தேடிக்கண்டறிகைத் துண்டத்தினுள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேடிக்கண்டறிகைத் துண்டங்களினுள் அமைந்துள்ளவிடத்து, அதிகாரசபையானது,-

(அ) ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் முதலீட்டுத் திட்டத்தின் அடிப்படைமீதும்; அத்துடன்

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட தேடிக்கண்டறிகைத் துண்டங்களினுள் அமைந்திருப்பின் மற்றும் அத்தகைய வேறு தேடிக்கண்டறிகைத் துண்டங்கள் தொடர்பில் ஏனைய ஒப்பந்தகாரர்களுடன் உடன்படிக்கையெதுவும் செய்துகொள்ளப்படாதிருப்பின்,

அபிவிருத்தி உரிமத்தில் தரப்பட்டுள்ள நியதிநிபந்தனைகளுக்கும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள தேவைப் பாடுகளுக்கும் அமைய, கண்டுபிடிப்பின் முழுப்பரப்பளவையும் கொண்டுள்ள இடப்பரப்புத் தொடர்பில் ஒப்பந்தகாரரொருவருக்குப் பொருளளவில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில் அபிவிருத்தி உரிமமொன்றை வழங்கலாம்.

(5) அபிவிருத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, இயைபான அபிவிருத்தி உரிமத்தின்கீழ் அபிவிருத்திக்காகக் குறித்தளிக்கப்பட்ட குறித்த பரப்பளவைக் கவனத்துட்கொண்டு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய தொகையிலான மேற்பரப்பு வாடகையொன்றை ஒப்பந்தகாரரொருவர் செலுத்துதல் வேண்டும்.

பங்கு பற்றுகின்ற அக்கறை யொன்றின் கைமாற்றம் அல்லது குறித்தளிப்பு

**21.** (1) ஒப்பந்தகாரர் ஒருவர், விடயத்துக்கேற்ப, ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில், தேடிக்கண்டறிகை உரிமத்தில் அல்லது அபிவிருத்தி உரிமத்தில் பங்குபற்றுகின்ற அக்கறையின் கைமாற்றத்துக்காக அல்லது குறித்தளிப்புக்காக அதிகாரசபைக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அதிகாரசபை அதன் விதப்புரையுடன் அதனை அமைச்சருக்குச் சமர்ப்பிக்கலாம்; அவர் அத்தகைய விண்ணப்பத்தையும் அதிகாரசபையின் விதப்புரையையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஒப்பந்தகாரர், அமைச்சரவையினால் விதிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, அவரது பங்குபற்றுகின்ற ஏதேனும் அல்லது எல்லா அக்கறையையும் கைமாற்றுவதற்கான அல்லது குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது அமைச்சரவையின் முடிவைப் பெற்றதன்மேல், அத்தகைய முடிவை விண்ணப்பத்தைச் செய்கின்ற ஒப்பந்தகாரருக்கு அறிவிப்பது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

(4) ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில், தேடிக்கண்டறிகை உரிமத்தில் அல்லது அபிவிருத்தி உரிமத்தில் பங்குபற்றுகின்ற அக்கறையொன்றின் கைமாற்றம் அல்லது குறித்தளிப்பு ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

ஒரு பங்கு பற்றுகின்ற அக்கறையைக் கொண்ட ஆட்களின் பொறுப்பு டைமை

**22.** பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை எந்தப் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தப் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பில் பங்குபற்றுகின்ற அக்கறை யொன்றைக் கொண்டுள்ள எவரேனுமாள் பின்வருவனவற்றுக்கான பொறுப்புடைமையைக் கொண்டவராதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இயைபான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின், தேடிக்

கண்டறிகை உரிமத்தின், அபிவிருத்தி உரிமத்தின், அல்லது கூறு அபிவிருத்தி உரிமத்தின் நியதிநிபந்தனைகள் மற்றும் பணிப்புகளும் வழிகாட்டுநெறிகளும் இணங்கியொழுகப்படுகின்றனவென்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும்; அத்துடன்

(ஆ) முன்றாந்திறத்தவரொருவருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஊறுபாட்டுக்கான அல்லது சேதத்துக்கான பொறுப்புகளுக்காகவும்.

*சேவை வழங்குநர்களுக்கு உரிமமளித்தல்*

**23.** அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ்த்தவிர, (இதனகத்துப்பின்னர் "சேவை வழங்குநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளொருவர், இயைபான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையொன்றின் ஆரம்பநிலை பெற்றோலியத் தொழிற்பாடுகள் தொடர்பில் அல்லது ஓர் ஒப்பந்தகாரருக்காக அல்லது அவர்சார்பில் ஓர் ஒப்பந்தகாரருக்குப் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குநர் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது. உரிமத்தை வழங்குவதற்கான நடவடிக்கைமுறையும் கட்டணமும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

*கூறு அபிவிருத்தித் திட்டம்*

**24.** (1) வர்த்தகரீதியில் அபிவிருத்திசெய்யப்படுவதற்கு இயன்றதாகவுள்ள பெற்றோலியத் தேக்கமொன்று-

(அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேடிக்கண்டறிகைத் துண்டங்களில் பரந்திருக்குமிடத்து; அல்லது

(ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அபிவிருத்தி உரிமங்களினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற இடப்பரப்பொன்றை மேவுமிடத்து,

அதிகாரசபையானது, அதன்கண் அமைந்துள்ள பெற்றோலியத் தேக்கத்தின் கூடுதல் வினைத்திறனான வர்த்தக அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக, விடயத்துக்கேற்ப, முழுத் தேக்கத்திலும் அல்லது அத்தகைய துண்டங்களின் அத்தகைய பாகத்தில்

அக்கறைகொண்டுள்ள ஒப்பந்தகாரர்களை, அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய கருமங்களையும் அதன் கூடுதல் வினைத்திறனான வர்த்தக அபிவிருத்திக்குச் சூழ்நிலை களில் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்களையும் கொண்டிருக்கவேண்டிய கூறு அபிவிருத்தித் திட்டமொன்றை அதிகாரசபைக்குக் கூட்டாகச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கூறு அபிவிருத்தித் திட்டத்தைக் கவனத்துட் கொள்வதன்மேல், அத்தகைய அபிவிருத்தித் திட்டத்தை, அவசிய மாயின் தேவைப்பட்ட திருத்தங்களுடன், அங்கீகாரத்துக்காக அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரின் அங்கீகார மொன்றைப் பெற்றுக்கொண்டதன்பின்னர், அதிகாரசபையானது, கூறு அபிவிருத்தித் திட்டத்தைச் சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்களுக்கு, அத்தகைய ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி உரிமம் அத்தகைய அறிவிப்புத் தேதியிலிருந்து பயனில்லாதொழிதல் வேண்டுமென்றும், கூறு அபிவிருத்தித் திட்டம் எந்த இடப்பரப்புத் தொடர்பானதோ அந்த இடப்பரப்பினுள், விதித்துரைக்கப்படக் கூடியவாறான நியதிநிபந்தனைகளின்கீழ் கூட்டுப் பெற்றோலியத் தொழிற்பாடுகளை நடாத்தும்படி அதிகாரமளிக்கின்ற கூறு அபிவிருத்தி உரிமமொன்றாக அது மாற்றப்படுதல் வேண்டு மென்றும் அறிவித்தல் வேண்டும்.

## பாகம் V

### தேசிய பெற்றோலியத் தொழிற்படுத்துநர்

தேசிய பெற்றோலியத் தொழிற் படுத்துநராக விருப்பதற்கு அமைச்சர் ஆட்கள் குழுவொன்றைப் பெயர்குறித்தல்

**25**. (1) (இச்சட்டத்தில், "தேசிய பெற்றோலியத் தொழிற்படுத்து நர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தியின் எல்லா அம்சங்கள் தொடர்பிலும் அரசின் அக்கறைகளை முகாமைசெய்யும் நோக்கத்துக்காகத் தனிவேறான கூட்டிணைக்கப்பட்ட உருவகமொன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும்

கட்டளைமூலம் அதனைத் தேசிய பெற்றோலியத் தொழிற் படுத்துநராகப் பெயர்குறித்தலும் வேண்டும்.

(2) தேசிய பெற்றோலியத் தொழிற்படுத்துநர்,-

(அ) ஏதேனும் கூட்டுமுயற்சியில் அரசின் பங்குபற்றுகின்ற அக்கறையை வைத்திருத்தலும் மற்றும் தயாரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் அரசினது பங்கை முகாமை செய்தலும் வேண்டும்;

(ஆ) பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின் தேவைப் பாடுகளுக்கும், கூட்டுமுயற்சிக்கு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் தேடிக்கண்டறிகை உரிமத்தில் அல்லது அபிவிருத்தி உரிமத்தில் அல்லது கூறு அபிவிருத்தி உரிமத்தில் தரப்பட்டுள்ள நியதிநிபந்தனை களுக்கும் இணங்கியொழுகுவதற்குப் பங்குபற்றுகின்ற அக்கறையின் வேறெல்லா வைத்திருப்போருடனும் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(இ) பங்குபற்றுகின்றவோர் அக்கறையைக் கொண்டிருக்கும் ஏனையோரின் தனிசுகளுக்காகக் கூட்டாகவல்லாது தனித்தனியாகப் பொறுப்பாதல் வேண்டும்.

*அரசின் பங்குபற்றுகின்ற அக்கறையின் அளவு*

**26**. அரசானது, தேசிய பெற்றோலியத் தொழிற்படுத்து நரினூடாக, இயைபான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையிற் குறித்துரைக்கப்பட்டவாறான பங்குபற்றுகின்ற அக்கறையொன்றை வைத்திருக்கலாம்.

## பாகம் VI

### அரசிறைசார் ஏற்பாடுகள்

*தயாரிப்புப் பகிர்வு பற்றிய நியதிகள்*

**27**. ஒவ்வொரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையும், அதிகாரசபையினால் பேச்சுவார்த்தைமூலம் செய்யப்படவேண்டிய வாறாக ஒப்பந்தகாரருக்கும் அரசுக்குமிடையேயான அரசிறைசார்

ஏற்பாடுகளும் தயாரிப்புப் பகிர்வுப் பொறிமுறையும் உட்பட, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

*அரசிறைசார் நிலையுறுதி*

**28.** தொடக்கக் கருத்திட்டப் பொருளாதார ஈடுபாடுகளைப் பரஸ்பரமானரீதியில் பேணிக்காப்பதனை இலக்காகக்கொண்ட ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைக்கான அரசிறைசார் நிலையுறுதிபற்றிய பொறிமுறையொன்று அத்தகைய பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையினுள் ஏற்பாடுசெய்யப் படுதல் வேண்டும்.

*இலாபங்களையும் வருமானத்தையும் தீர்மானித்தல்*

**29.** பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையில் வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், எவையேனும் ஆரம்பநிலைத் தொழிற்பாடுகளிலிருந்தான ஒப்பந்தகாரரின் வருவாய்க்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

## பாகம் VII

### அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலரும் பணியாட்டொகுதியினரும்

*அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல்*

**30.** (1) அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக விருக்க வேண்டியவரும் அமைச்சரினால் நியமிக்கப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவருமான அதிகாரசபை யின் பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையினது பணியாட்டொகுதியினரின் நிருவாகக் கட்டுப்பாடு உட்பட அதிகாரசபையின் எல்லா அலுவல்களையும் நடாத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் உடையவராகவிருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்கப் பிரயோகிக்கப்படுவதனையும், புரியப்படுவதனையும், நிறைவேற்றப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புடைமை பணிப்பாளர் தலைமையதிபதிக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, (4) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்தளிக்கப்பட்ட அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் சபைக்குப் பொறுப்பாதலும் வகைசொல்லவேண்டியவராதலும் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**31**. பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை, ஒரு தேடிக்கண்டறிகை உரிமம், ஒரு கூட்டாய்வு உடன்படிக்கை, ஓர் அபிவிருத்தி உரிமம் அல்லது கூறு அபிவிருத்தி உரிமம் எந்தத் துண்டம் அல்லது இடப்பரப்புத் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்தத் துண்டம் அல்லது இடப்பரப்புத் தொடர்பில் தொடர்புபட்ட எல்லா இடாப்புக்களையும், நிலப்படங்களையும், வேறு பதிவேடுகளையும் பேணுதல்;

(ஆ) அதுதொடர்பாக அதிகாரசபையினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக் கிணங்க, ஒரு விடயம் விடயமாக என்ற அடிப்படையில் வரைவுப் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைகளைத் தயாரித்தல்;

(இ) இலங்கையில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள பெற்றோலிய வளங்கள்பற்றி புவிவரலாற்றியல்சார், நிலப்பூதியல்சார், பொறியியல் மற்றும் பொருளாதாரத் தரவைச்

சேகரித்தலும், தொகுத்தலும், பகுப்பாய்வுசெய்தலும், வெளியிடுதலும் அல்லது சேகரிக்கப்படுவதனை, தொகுக்கப்படுவதனை, பகுப்பாய்வு செய்யப்படுவதனை மற்றும் வெளியிடப்படுவதனைச் செய்வித்தலும், புலமைச் சொத்துரிமைகள் ஏற்றங்கீகரிக்கப்படுவதனை உறுதிப் படுத்துதலும்;

(ஈ) புவிவரலாற்றியல்சார் மாதிரிகளின் தொழினுட்ப மதிப்பீட்டுக்கான வழிகாட்டுநெறிகளை உருவாக்குதல்;

(உ) இலங்கையில் ஒப்பந்தகாரர்களினால் நடாத்தப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளைக் கண்காணித்தலும், அத்தகைய ஒப்பந்தகாரர்களினால் (இலத்திரனியற் படிவத்திலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக வாயினுஞ்சரி) பேணப்பட்ட எல்லாப் புத்தகங்களையும், பதிவேடுகளையும், அறிக்கைகளையும், கணக்குகளையும், மாதிரிகளையும், தரவையும் பரிசோதனை செய்தலும் சோதனையிடுதலும்;

(ஊ) விடயத்துக்கேற்ப, அபிவிருத்தி உரிமம், தேடிக்கண்டறிகை உரிமம் அல்லது கூறு அபிவிருத்தி உரிமம் எந்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஒப்பந்தகாரரை, எழுத்திலான அறிவித்தல்மூலம், அதிகாரசபை அதன் பணிகளை முறையாக நிறைவேற்று வதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய விபரத்திரட்டை அல்லது தகவல்களைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துதல்;

(எ) இலங்கையில் மீட்டெடுக்கப்பட்ட பெற்றோலிய வளங்களின் தொகைகளை அளவீடுசெய்தலும் அவற்றின் மாதிரிகளை எடுத்தலும்;

(ஏ) ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின் நியதிகளின்படி ஒப்பந்தகாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டங்களையும் வரவுசெலவுத்திட்டங்களையும் அங்கீகரித்தல்;

(ஐ) ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை தொடர்பான எல்லா ஒழுங்குபடுத்தும் பணிகளையும் நிறைவேற்றுதல்;

(ஒ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கட்டணங்களை அல்லது வேறெவை யேனும் கொடுப்பனவுகளை விதிப்பனவு செய்தல்;

(ஓ) சபையின் அங்கீகாரத்துக்கமைய, அவசியமானபோது ஆலோசகர்களையும் நிபுணத்துவ மதியுரைநர்களையும் அமர்த்துதலும், அவசியமானவாறான அத்தகைய ஆற்றலைக் கட்டியெழுப்புகின்ற வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதலும்; அத்துடன்

(ஔ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது அதற்கு உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான செயற்பாடுகளை நடாத்துதல்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதியினரும் ஊதியமும்*

**32.** (1) அதிகாரசபையானது, தொழினுட்ப மற்றும் தேர்ச்சிபெற்ற ஆளணியினர், நிருவாக மற்றும் முகாமைசார் ஆளணியினர் மற்றும் அதற்குத் தேவைப்படக்கூடியவாறான வேறு ஆட்கள் உட்பட அதிகாரசபைக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் தேவைப்படுகின்றவாறான அத்தகைய பணியாட்டொகுதியினரைத் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் பணியாட்டொகுதியினருக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்

**33.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவாறான ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபையுடனான ஏதேனும் சேவைக் காலப்பகுதி அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*34. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், அவ்வலுவலரினதும் அல்லது ஊழியரினதும், அந்த உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின தும் சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அத்தகைய நியமனமானது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு காலப் பகுதிக்காக இருத்தல் வேண்டுமென்பதுடன், சபையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனை களின் மீது, அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.*

*உயர்கல்வி நிறுவனங்களி லிருந்தான அலுவலர்களை அதிகாரசபைக்கு நியமித்தல்*

*(2) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், அதிகாரசபையின் பணியாட்டொகுதியினது வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.*

## *பாகம்* VIII

### *பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி நிதியம்*

*35. (1) அதிகாரசபையினால் நிருவகிக்கப்பட்டதும் பின்வருவன அதனுட் செலுத்தப்படவேண்டியதும் (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி நிதியம் எனவழைக்கப்பட்டு அறியப்படுவதுமான நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்:-*

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்

*(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;*

*(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்கள்;*

(இ) எல்லா மானியக்கொடைகளும், நன்கொடைகளும், உதவு தொகைகளும் அல்லது வேறேதேனும் வருமானமும்;

(ஈ) பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைகளின் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட எல்லாப் பணங்களும்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட குற்றப்பணங்களின் தொகை.

(2) அதிகாரசபையானது நிதியத்திலுள்ள பணங்களைப் பின்வருமாறு பயன்படுத்துதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் நிருவாகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான செலவுதொகைகளை எதிர்கொள்வதற்கும் பணியாட்டொகுதியினருக்கு ஊதியமும் ஊக்குவிப்பு களும் வழங்குவதற்கும்;

(ஆ) அதிகாரசபையின் வசதிகளைச் சீராக்குவதற்கும்;

(இ) பெற்றோலியத் தொழிற்பாடுகளின் எவையேனும் பாதகமான தாக்கங்களுக்கெதிராகச் சூழலைப் பேணிக்காப்பதற்கும் பாதுகாப்பதற்கும் அவசியமான வாறான அத்தகைய ஆராய்ச்சிகளை அல்லது தொழிற்பாடுகளை நடாத்துவதற்கும்;

(ஈ) இலங்கையின் இயல்திறப் பெற்றோலிய வளங்கள் உள்ளமையை மேலும் விளங்கிக்கொள்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய தரவைக் கொள்ளுதலும் அதிகரித்தலும்;

(உ) ஆரம்பநிலை பெற்றோலியத் துறையின் முகாமைத்து வத்தை அதிகரிப்பதற்காக ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட பணிகளை நிறை வேற்றுகின்ற அதிகாரசபையின் பணியாட்டொகுதி யினரினதும் வேறு ஊழியர்களினதும் அறிவுக் கைமாற்றுகைப் பயிற்சியிலும் ஆற்றலைக் கட்டியெழுப்பு வதிலும் முதலீடுசெய்தல்; அத்துடன்

(ஊ) சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குச் சபையினால் உறப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறெல்லாச் செலவுகளையும் செலுத்துதல்.

(3) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவில், நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்களின் பத்து சதவீதத்தினதான தொகையொன்றைக்கொண்ட பணத்தொகையொன்றைத் திரட்டு நிதியத்துக்கு வரவுவைத்தல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**36.** (1) நிதியத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IX

### பொதுவான ஏற்பாடுகள்

ஒப்பந்தகாரர்களுக்காக ஆதனத்தைக் கொள்ளுதல்

**37.** (1) விடயத்துக்கேற்ப, ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின்கீழ், ஒரு கூட்டாய்வு உடன்படிக்கையின்கீழ், ஒரு தேடிக்கண்டறிகை உரிமத்தின்கீழ், ஓர் அபிவிருத்தி உரிமத்தின்கீழ் அல்லது ஒரு கூறு அபிவிருத்தி உரிமத்தின்கீழ் ஒப்பந்தகாரரினால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளுக்கு ஏதேனும் காணி அல்லது காணியொன்றிலான ஏதேனும் சேவகம் அவரினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய தேவைப்பாடுபற்றி அவர் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) அத்தகைய காணி அல்லது அதன்கண்ணுள்ள சேவகம் அதிகாரசபையின் நோக்கத்துக்காக அதிகாரசபையினால் தேவைப்படுமிடத்து, அத்தகைய காணி அல்லது அதன்கண்ணுள்ள சேவகம் அரசாங்கத்தினால் அல்லது அதிகாரசபையினால் (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ்

கொள்ளப்படலாம் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அக்காணியை அல்லது அதன்கண்ணுள்ள சேவகத்தினைக் கொள்ளும் நோக்கத்துக்காக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதலும் வேண்டும். அத்தகைய காணி அல்லது அதன்கண்ணுள்ள சேவகம், காணி கொள்ளுதற் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு பகிரங்க நோக்கத்துக்காகத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அத்தகைய ஏதேனும் காணியை அல்லது அதன்கண்ணுள்ள சேவகத்தினைக் கொள்ளுவதற்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத் தொகை ஒப்பந்தகாரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் நோக்கத்துக்காக ஏதேனும் அரசகாணி தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை எந்த நோக்கத்துக்காக அளிக்கப்படலாமோ அந்த நோக்கமொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பது டன், அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபைக்கு அவ்வாதனத்தின் ஒரு விசேட மானியக் கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

அமைச்சரின் பணிப்பு

**38.** அமைச்சர், காலத்துக்குக்காலம், அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் தொடர்பாக அத்தகைய பொதுவான அல்லது விசேடமான எழுத்திலான பணிப்புகளை அதற்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுப்பது அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கையளித்தல்

**39.** (1) சபையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, 4 ஆம் பிரிவின் (எ), (ஏ), (ஒ) மற்றும் (க) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும்தவிர, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும்

பணிகளுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலா மென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேட அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், சபையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் மற்றும் புரியலாம்.

பணிப்பாளர் தலைமையதிபதியினால் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் கையளிக்கப் படுதல்

**40.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கைளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த அலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர் ஒருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும்.

உட்பிரவேசிப் பதற்கான தத்துவங்கள்

**41.** அதிகாரசபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், எந்நேரத்திலும், பெற்றோலியத் தொழிற்பாடு கள் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏதேனும் இடத்தினுட் பிரவேசித்து அதனைச் சோதனையிடலாமென்பதுடன், பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின் அல்லது கூட்டாய்வு

உடன்படிக்கையின் அல்லது வேறேதேனும் உடன்படிக்கையின் நியதிநிபந்தனைகள் அல்லது ஒரு தேடிக்கண்டறிகை உரிமம், ஓர் அபிவிருத்தி உரிமம் அல்லது ஒரு கூறு அபிவிருத்தி உரிமம் என்பனவற்றினால் விதிக்கப்பட்ட நியதிநிபந்தனைகள் அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாடு இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறாக அதன் மீதான புலனாய்வுகளை அல்லது ஆய்வுகளை நிறைவேற்றலாம்.

வருடாந்த அறிக்கை

**42.** (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள் அவ்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாடுகள்பற்றி முழு விபரங்களையும் கொடுக்கின்ற நிதிசார் அறிக்கையுட்பட்ட வருடாந்த அறிக்கை யொன்றை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) அமைச்சர், வருடாந்த அறிக்கையின் பிரதிகள் பாராளுமன்றத்தில் இடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

அதிகார சபையின் எல்லா உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**43.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், ஊழியர்களும், முகவர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்

**44.** அதிகாரசபையானது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

செலவுகள் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல்

**45.** (1) அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டு

மென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினரொருவரினால், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

தவறுகள்

**46**. (1) (அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் 41 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்கள் அத்தகைய ஆளினால் பிரயோகிக்கப்படுவதில் அவரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக் கட்டையிடுகின்ற;

(இ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு நியாயமான காரணமின்றி இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது எவையேனும் தகவல்களில் அல்லது ஒரு தேடிக்கண்டறிகைத் துண்டம் அல்லது அபிவிருத்தித் துண்டம் தொடர்பி

லான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையை அல்லது கூட்டாய்வு உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில் அறிந்துகொண்டு ஏதேனும் பொய்யான கூற்றை அளிக்கின்ற;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் அவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டிலிருந்து அல்லது எவையேனும் தகவல்களிலிருந்து அல்லது ஒரு தேடிக்கண்டறிகைத் துண்டம் அல்லது அபிவிருத்தித் துண்டம் தொடர்பிலான பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையை அல்லது கூட்டாய்வு உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது ஒரு தேடிக்கண்டறிகைத் துண்டம் அல்லது அபிவிருத்தித் துண்டம் தொடர்பில் தேடிக்கண்டறிகை உரிமத்தில், அபிவிருத்தி உரிமத்தில் அல்லது கூறு அபிவிருத்தி உரிமத்தில் அல்லது ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்தில் அல்லது கூறு அபிவிருத்தித் திட்டத்தில் ஏதேனும் முக்கியமான விடயத்தை வேண்டுமென்று விட்டுவிடுகின்ற;

(ஊ) எவையேனும் பெற்றோலியத் தொழிற்பாடுகளை வேண்டுமென்று சேதப்படுத்துகின்ற அல்லது அதுதொடர்பில் நாசவேலை புரிகின்ற; அல்லது

(எ) பெற்றோலிய வளங்களின் அல்லது பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப் பணத்தின் அரசுக்குரிய பங்கை மோசடியானமுறையில் அல்லது அசட்டையான முறையில் அரசிடமிருந்து பறிக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்ட

னைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அவர் எந்தத் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அந்தத் தவறு, குற்றத்தீர்ப்புக்குப்பின்னர் தொடர்ந்து புரியப்படின், அவர் மேலதிகத் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், அத்தவறானது அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இது தொடர்பில் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிவானானவர், அத்தவறாகவமைகின்ற செயலின் விளைவாக, அரசிடமிருந்து, விடயத்துக்கேற்ப, எந்தப் பெற்றோலிய வளங்கள் அல்லது பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப்பணம் பறிக்கப் பட்டுள்ளதோ அந்தப் பெற்றோலிய வளங்களின் அல்லது பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப்பணத்தின் பெறுமதிக்குச் சமமானவாறான அத்தகைய பணத்தொகையிலான நட்டஈட்டை அரசுக்குச் செலுத்தும்படி தவறாளருக்குக் கட்டளையிடலாம்.

ஆட்கள் குழுவொன்றினாலான தவறுகள்

**47**. இச்சட்டத்தின் நியதிகளின்படியான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரிப்படுமிடத்து, அப்போது, அவ்வாட்கள் குழுவானது-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாள ரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) ஒரு குழுமம்தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும்,

அத்தவறைப் புரிந்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலேயுள்ள (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனுமாள், அத்தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால், அத்தகைய தவறைப் புரிந்துள்ளவராகக் கருதப்படுதலாகாது.

ஒழுங்குவிதிகள்

**48.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற வேறேதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் கருமங்களுள் எவையேனும் கருமங்கள் தொடர்பில் அல்லது எல்லாம் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) தரவு உரிமமளித்தல் தொடர்பாகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ஆ) ஒரு தேடிக்கண்டறிகை உரிமத்துக்கான, அபிவிருத்தி உரிமத்துக்கான மற்றும் கூறு அபிவிருத்தி உரிமத்துக்கான விண்ணப்பத்தின் படிவமும் சட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டிய அத்தகைய உரிமங்களின் படிவமும்;

(இ) வரையறுத்துக்கூறப்பட்ட தேடிக்கண்டறிகைத் துண்டங்கள் தொடர்பில் பெற்றோலியத் தொழிற்பாடுகளை நடாத்துவதற்காக முன்மொழிவுகளைக் கோருவதற்கும் ஒப்பந்தகாரர்களைத் தெரிவுசெய்வதற்குமான நடவடிக்கைமுறை;

(ஈ) பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைகளையும் கூட்டாய்வு உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளும் போது பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும்

பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையிலும் கூட்டாய்வு உடன்படிக்கையிலும் உள்ளடக்கப்படவேண்டிய கட்டளைக்கற்களை குறித்துரைப்பதற்கும்;

(உ) அமைச்சரினதும் அதிகாரசபையினதும் தகவல்களுக்காகவும் அபிவிருத்தியின் ஆயுட்காலம்பூரான கண்காணிப்புக்காகவும் கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட அரசிறைசார் திட்டவிபரங்களின் சுருக்கம்;

(ஊ) சட்டத்தின்கீழ் அந்தந்த உரிமங்கள் வழங்கப்படுமுன்னர் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பின்வருவனவற்றின் நோக்கெல்லைக்கான அளவுக் குறிப்பீடுகள்:-

(i) நிலப்பூதியல் தொழிற்பாடுகளும் ஆய்வுகளும்;

(ii) துளையிடுதல் தொழிற்பாடுகள்; அத்துடன்

(iii) சுழியோடுதற் செயற்பாடுகள்;

(எ) பின்வரும் கருமங்களுக்கான அளவுக்குறிப்பீடுகள்:-

(i) வேலை நிகழ்ச்சித்திட்டத்திலும் கூறு அபிவிருத்தித் திட்டத்திலும் உள்ளடக்கப்பட வேண்டியவை;

(ii) அதிகாரசபையின் அலுவலர்கள் அல்லாதோர், அதிகாரசபையின் சபை உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதி என்போரின் தகைமைகள் தொடர்பானவை;

(iii) பெற்றோலியத் தொழிற்பாடுகளை நடாத்துதல் தொடர்பாக ஏற்புடையற்பாலவாறாகச் சூழல் பாதுகாப்பு மற்றும் தான்புரிதொழில்சார் சுகாதாரம் அத்துடன் காப்புத் தொடர்பானவை; அத்துடன்

(iv) உள்நாட்டு உள்ளீடு தொடர்பாக உள்ளடக்கப் பட வேண்டியவை.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டபின்னர் மூன்றுமாதங் களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதன் கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதியொன்று எத்தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**49**. (1) அதிகாரசபையானது பின்வருவன தொடர்பிலான விதிகளை ஆக்கலாம்:- விதிகள்

(அ) பல்வேறு அலுவலர்களை நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(ஆ) சபையின் கூட்டங்களை, வருடாந்தப் பொதுக்கூட்டத்தை மற்றும் அதிவிசேட கூட்டங்களை அழைப்பதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை;

(இ) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டின் மேல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நீக்கங்களும், பேணல்களும், நிலைபெயர்கால ஏற்பாடுகளும்

**50.** (1) இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர், 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் மற்றும் 20 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகையவராகவும் அதுவாகவும் அடையாளங்காணப்பட்டுப் பணியாற்றிய பணிப்பாளர் தலைமையதிபதியும், அதிகாரசபையும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் –

(அ) இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியாகவும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட அதிகாரசபையாகவும்,

தொடர்ந்தும் இருக்கின்றவராகவும் இருக்கின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) மேற்கூறப்பட்ட சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும்,-

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபைக்

குரித்தாக்கப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட அதிகாரசபைக்குரித்தாதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதியன்றுள்ளவையும் 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபையினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்டவையுமான எல்லா ஒப்பந்தங்களும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட அதிகாரசபையினால் அல்லது அதிகார சபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கை களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(இ) 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபை யினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறாதுள்ளவை யுமான எல்லா வழக்குகளும் வழக்குநடவடிக்கைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட, விடயத்துக் கேற்ப, வழக்குகளாகவும் வழக்குநடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டும்;

(ஈ) 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபையின் உறுப்பினர்களாகவும், அலுவலர்களாகவும், ஊழியர் களாகவும் இருந்தவர்களும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகித்தவர்களுமான

எல்லா ஆட்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழான அதிகாரசபையின் உறுப்பினர் களாகவும், அலுவலர்களாகவும், ஊழியர்களாகவும் தொடர்ந்திருப்பவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபையின் சார்பில் அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று திருப்திசெய்யப்படாதுள்ளவையுமான எல்லாத் தீர்ப்புகளும் கட்டளைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் சார்பில் அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்ட தீர்ப்புகளாகவும் கட்டளை களாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்;

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபை யினால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் நியதிகளின்கீழ் எவரேனும் ஒப்பந்தகாரருக்குப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குகின்றவர்களும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அத்தகைய பண்டங்களையும் சேவைகளையும் தொடர்ந்து வழங்குகின்றவர்களுமான எல்லாச் சேவை வழங்குநர்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகச் சேவை வழங்குநர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(எ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரசபையின் எல்லா அக்கறைகளும், உரிமைகளும், சொத்துக்களும்,

கடப்பாடுகளும், தனிசுகளும், பொறுப்புக்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அதிகாரசபையின் அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், தனிசுகள் மற்றும் பொறுப்புக்களாக இருப்பவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப் பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையுமான எல்லா உரிமங்களும் ஆக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகளும் மற்றும் விடயத்துக்கேற்ப, ஒவ்வோர் உரிமம் அல்லது உடன்படிக்கை தொடர்பாகவும் நிறைவுசெய்யப்பட்ட எல்லாத் தரவு விற்பனைகளும், நடாத்தப்பட்ட ஆய்வுகளும், நிறைவேற்றப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளும் சம்பந்தப்பட்ட கருமங்களும் மற்றும் எல்லாத் தொழிற்பாடுசார் ஒழுங்கேற்பாடுகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து —

(அ) வெளிப்படையாக நீக்கப்பட்டாலொழிய அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் புதிய உரிமங்களுடன், செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுடன் அல்லது ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் அவை ஒவ்வாதனவாக வந்தால், தொடர்ந்தும் செல்லுபடியுடையனவாகவும் பயனுடையனவாகவும் இருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும். ஓர் ஒவ்வாமையின் விடயத்தில், விடயத்துக்கேற்ப, புதிய உரிமங்கள், உடன்படிக்கைகள் அல்லது ஒழுங்குவிதிகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்; அத்துடன்

(ஆ) முரணாக வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, இச்சட்டத்தின்கீழ் அவை நிறைவுசெய்யப் பட்டன, நடாத்தப்பட்டன அல்லது நிறைவேற்றப்பட்டன என்றாற்போன்று தொடர்ந்தும் செல்லுபடியுடையனவாகவும் பயனுடையனவாகவும் இருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

**51.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய,- பொருள்கோடல்

"அணித்தாயுள்ள வலயம்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம் இலங்கையின் அணித்தாயுள்ள வலயமாகவிருப்பதாக வெளிப்படுத்தப்பட்ட வலயம் என்று பொருளாகும்;

"ஒப்பந்தகாரர்" என்பது, கூட்டாய்வுத் தொழிற்பாடுகளை உள்ளடக்கவேண்டிய ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின்கீழ் பெற்றோலியத் தொழிற்பாடுகளை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

"புறநீங்கலான பொருளாதார வலயம்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் புறநீங்கலான பொருளாதார வலயமாகவிருப்பதாக வெளிப்படுத்தப்பட்ட வலயம் என்று பொருளாகும்;

"அரசிறைசார் நிலையுறுதி" என்பது, ஓர் அரசாங்க அரசிறைசார் கொள்கை மாற்றமடையும் விடயத்தில் அரசிறைசார் அளபுருக்களுள் எவற்றினதும் சீராக்கத்தை அனுமதிப்பதன்மூலம் ஒரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையைச் செய்துகொள்கின்ற நேரத்தில் பரஸ்பரமாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான அதே ஒட்டுமொத்தக் கருத்திட்டப் பொருளியல்களை ஒப்பந்தகாரருக்காகவும் அரசுக்காகவும் பேணுதல் என்று பொருளாகும்;

"வரலாற்றுமுறையான நீர்ப்பரப்புகள்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்

தின்மூலம் வெளிப்படுத்தப்பட்ட வரலாற்றுமுறையான நீர்ப்பரப்புகளின் எல்லைகள் என்று பொருளாகும்;

"கூட்டாய்வு உடன்படிக்கை" என்பது, வரையறுத்துக்கூறப்பட்ட ஓர் இடப்பரப்பின் நீரகக் கரிய இயல்திறனை ஆய்வுசெய்து மதிப்பிடுவதற்குச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் நியதிகளின்படி அரசுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம், 45 ஆம் உறுப்புரைகளின்கீழ் இச்சட்டம் தொடர்பான விடயமும் பணிகளும் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"ஆரம்பநிலைப் பெற்றோலியக் கைத்தொழிலுக்கான தேசிய கொள்கை" என்பது, அரசின் தேசிய அக்கறைக்கும் ஒப்பந்தகாரர்களின் அல்லது தொழிற்படுத்துநர்களின் அக்கறைகளுக்கும் இடையே சரியான சமன்பாட்டை உறுதிப்படுத்துவதன் மூலம் ஆரம்பநிலைக் கைத்தொழிலைக் கண்காணிப்பதற்கும் வழிகாட்டுவதற்கு மெனச் சவால்களை ஏற்றங்கீகரிப்பதன் மூலமும் விதப்புரைகளை வழங்குவதன்மூலமும் ஆரம்பநிலைப் பெற்றோலியத் துறையின் பொது நெறிகளையும், முகாமைத்துவத்தையும், அபிவிருத்தியையும், மற்றெல்லா தொடர்புபட்ட அம்சங்களையும் உருவரைகின்ற ஒரு கொள்கை என்று பொருளாகும்;

"முக்கியமற்ற நியதிநிபந்தனைகள்" என்பது, முன்மொழிவு களின் மதிப்பீட்டுப் பெறுபேறுகளின்மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டிராத விடயங்கள் என்று பொருளாகும்;

"பங்குபற்றுகின்ற அக்கறை" என்பது, ஏதேனும் உருவகத்தில் அல்லது ஒரு கூட்டுமுயற்சியில் ஒரு பங்குபற்றுநரின் சொத்தாண்மையின் அல்லது ஒப்புரவின் பங்கு என்று பொருளாகும்;

"பெற்றோலியத் தரவு" என்பது, எல்லாத் தகவல்களினதும் பொருள்கோடல் அறிக்கைகளுட்பட பெற்றோலியத் தொழிற்பாடுகள், பொருளாதாரத் தரவு மற்றும் புவிவரலாற்றியல்சார் மாதிரிகள் தொடர்பில் தயாரிக்கப் பட்ட அறிக்கைகள், பகுப்பாய்வுகள், பொருள்கோடல்கள் மற்றும் மதிப்பீடு உட்பட புவிவரலாற்றியல்சார், நிலப்பூதியல்சார், நிலவேதியல்சார், பாறைப்பூதியல்சார், பொறியியல், கிணறின் விபரங்களைக்கொண்டுள்ள பேரேடுகள், நிலப்படங்கள், காந்தரீதியிலான நாடாக்கள், உட்கருக்கள், துண்டங்கள் மற்றும் தயாரிப்புத் தரவு என்றும் எல்லாப் பொருள்கோடல்சார் மற்றும் வழிவந்த தரவு என்றும் பொருளாகும்;

"பெற்றோலியத் தொழிற்பாடுகள்" என்பது, புவி வரலாற்றியல்சார் ஆய்வுகள், நிலநடுக்கத் தரவின் பொருள்கோடல், கிணறு துளையிடுதல், தயாரிப்புப் பரீட்சித்தல், தனிவேறாக்குகை, பதனிடுதல், களஞ்சியப்படுத்துகை, மீட்டெடுப்பு, இடப்பெயர்வு மற்றும் சந்தைப்படுத்தல் என்பனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், பெற்றோலிய வளங்களின் தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி மற்றும் மீட்டெடுப்பிலான செயற்பாடுகள் என்று பொருளாகும்;

"பெற்றோலியத் தேக்கம்" என்பது, பெற்றோலிய வளங்களின் இயற்கையானமுறையில் இடம்பெறுகின்ற ஒன்று திரளுகை என்று பொருளாகும்;

"பெற்றோலிய வளங்கள்" என்பது, இயற்கையான திரவ, வாயுசார், திண்ம அல்லது பகுதியளவில் திண்ம நிலையிலாயினுஞ்சரி சுத்திகரிக்கப்படாத எண்ணெய்,

இயற்கை வாயு மற்றும் நீரகக்கரியம், அது தொடக்க விடத்திலிருக்கின்ற அல்லது பெற்றோலியத் தொழிற்பாடுகளின்மூலம் மீட்டெடுக்கப்படுகின்ற எண்ணெய்யின் மற்றும் வாயுவின் நீரேற்றங்கள், அத்துடன் நீரகக்கரியங்களுடன் இணைந்த கந்தகம் மற்றும் வேறு ஒத்த பதார்த்தங்கள் என்று பொருளாகும்;

"பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை" என்பது, அரசுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கும் இடையே இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்துகொள்ளப்பட்ட தயாரிப்புப் பகிர்வுக்கானவோர் ஒப்பந்தம் என்று பொருளாகும்;

"பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப்பணம்" என்பது, ஓர் அபிவிருத்தி உரிமத்தினால் மேவப்பட்ட இடப்பரப்பிலிருந்து ஓர் ஒப்பந்தகாரரினால் மீட்டெடுக்கப்படுகின்ற எல்லாப் பெற்றோலிய வளங்களினதும் சந்தைப் பெறுமதிமீது அவரினால் செலுத்தப்படற்பாலதான அரசுரிமைப்பணம் என்று பொருளாகும்;

"ஆள்புலக் கடல்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் இலங்கையின் ஆள்புலக் கடலாகவிருப்பதாக வெளிப்படுத்தப்பட்ட கடலின் எல்லைகள் என்று பொருளாகுமென்பதுடன் இலங்கையின் உள்ளக நீர்ப்பரப்புக்களையும் உள்ளடக்கும்;

"கூறு அபிவிருத்தி" என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேடிக்கண்டறிக்கைத் துண்டங்களின் அல்லது இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட அபிவிருத்தி உரிமங்களினால் மேவப்பட்ட இடப்பரப்பின் எல்லைகளினுள் அமைந்துள்ள ஒரு பொதுவான தேக்கத்தின் அபிவிருத்தி என்று பொருளாகும்;

"கடல் பற்றிய சட்டத்தின்மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம்" என்பது, ஜமேக்கா, மொன்டிகோ விரிகுடாவில் 1992 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1994 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆந் தேதியன்று வலுவுடையதாக வந்ததும் 1994 ஆம் ஆண்டு யூலை 19 ஆந் தேதியன்று இலங்கையினால் ஏற்புறுதி செய்யப்பட்டதுமான கடல்பற்றிய சட்டத்தின்மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம் என்று பொருளாகும்; அத்துடன்

"ஆரம்பநிலை" என்பது, தேடிக்கண்டறிகையையும் அபிவிருத்தியையும் உட்படுத்துகின்ற எண்ணெய் மற்றும் வாயுக் கைத்தொழிலில் உள்ளவையும் எண்ணெயையும் வாயுவையும் கண்டறிவதற்கும், துளையிடுவதற்கும், பரீட்சிப்பதற்கும், தயாரிப்பதற்குமான நடபடிகளை ஆரம்பத்தில் எடுக்கின்ற ஓர் ஒப்பந்தகாரரைக் கையாள்கின்றவையுமான தொழிற்பாடுசார் கட்டங்கள் என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**52**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.